**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**மாவட்ட நீதிமன்ற வளாகம்,கோயம்புத்தூர்.**
**சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு**
**(Selection of Para Legal Volunteers)**

**DLSA/CBE/PLV/01/2024** **தேதி:07.05.2024**

*********

கோவை மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் கோவை மாவட்டத்தில் இயங்கி வரும் பொள்ளாச்சி,மேட்டுப்பாளையம்,வால்பாறை, சூலூர்,மதுக்கரை மற்றும் அன்னூர் ஆகிய வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை பாமர மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக மொத்தம் **50** "சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers)" தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள்.மேற்படி இப்பணி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே,இது நிரந்தர பணிக்கானது அல்ல,முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துகொள்கிறோம்.

மேலும்,கோவை மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கு கீழ்க்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமகன்
- பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்
- அங்கன்வாடி பணியாளர்கள்
- மருத்துவர்கள்
- சட்டக்கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை)
- சமூக சேவை செய்யும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் கட்சி சாரா தன்னார்வ தொண்டு நிறுவனத்தை சார்ந்தவர்கள்)
- மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள்
- திருநங்கைகள்
- அடிப்படை கல்வி தகுதி (கணினி அறிவுடன்) உடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள்.

மேற்கண்ட பிரிவினர்களில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சுயகையொப்பம் இட்ட கல்வி மற்றும் தகுதி சான்றிதழ் நகல்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு வரும் **20.05.2024** மாலை **5.00** மணிக்குள் தபால் வழியாக விண்ணப்பிக்கலாம்.

**மாண்புமிகு.தலைவர்/மாவட்ட முதன்மை நீதிபதி,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**மாவட்ட நீதிமன்ற வளாகம்,கோயம்புத்தூர்-641018.**

மேலும், சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர் தேர்வு தொடர்பான விண்ணப்பபடிவத்தினை கீழ்க்கண்ட கோவை மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

மேலும்,நேர்காணல் குறித்த இதர தகவல்களை கோவை மாவட்ட நீதிமன்ற இணையதளத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

இணையதள முகவரி: https://coimbatore.dcourts.gov.in/legal-services-authority/

| | |
|---|---|
| விண்ணப்பிக்க கடைசி தேதி | **20.05.2024** |
| நேர்காணல் நடைபெறும் தேதி | **23.05.2024** |

-//Sd.XXXX//-
(Tmt.G.Vijaya)
**தலைவர்/மாவட்ட முதன்மை நீதிபதி,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**மாவட்ட நீதிமன்ற வளாகம்,**
**கோயம்புத்தூர்.**

விண்ணப்பதாரர் புகைப்படம்,சுய சான்றொப்பம் இடவும்

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,கோயம்புத்தூர்.

**சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கான**
**விண்ணப்ப படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | மதம் மற்றும் வகுப்பு | | |
| 6. | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி | : | |
| 7. | நிரந்தர முகவரி<br>தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி | : | |
| 8. | காவல்துறையில் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா? இருப்பின் அதன் விவரம் | : | |
| 9. | இதற்கு முன் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம்<br>(வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 10. | இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் நகல் விவரம் (சுய சான்றொப்பமிட்டது) | : | |

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கான கடமை சேவை மட்டுமே,உத்தியோகம் இல்லை,இந்தப்பணி முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை ஊதியம் ஏதும் இல்லை.சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

மேலும்,இப்பணியினை கொண்டு எதிர்காலத்தில் அரசுப்பணியில் எவ்வித முன்னுரிமையும் கோர மாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன்.

தேதி:

இடம்:

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**